**நாள்:12.03.2026.**

**MCOP.13/2025- PW1 .**

**திரு. பைரேஷ் த/பெ.முத்ராஜ்**

**சாட்சிக்கு தமிழ் தெரியாது என்றும் தெலுங்கு மட்டுமே தெரியும் என்பதால் இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரியும் வழக்கறிஞர் திரு.R.சிவபிரகாஷ்., B.Com., L.L.B., M.S.No.1976/2021 அவர்கள் சாட்சிக்கு தெலுங்கில் சொல்ல சாட்சி திரும்ப தெலுங்கில் சொல்லும் பதிலை அவர் தமிழில் மொழியாக்கம் செய்து இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கிறார். இருதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரணை நடைபெறுகிறது. இருதரப்பு வழக்கறிஞர்களும் திரு.R.சிவபிரகாஷ்., B.Com., L.L.B., M.S.No.1976/2021 அவர்கள் மொழிப்பெயற்பதற்கு ஆட்சேபனை இல்லை என்பது தெரிவிக்கப்பட பிறகு குறுக்கு விசாரணை நடைபெறுகிறது.**

**குறுக்கு விசாரணை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் :**

எப்பொழுது விபத்து ஏற்பட்டது என்றால் 06.03.2025 ல் விபத்து ஏற்பட்டது. விபத்து இரவு 11.30 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். நான் Honda இருசக்கர வாகனத்தை அசோக் என்பவர் ஓட்ட நான் பின்னால் உட்கார்ந்து சென்றேன். எங்கிருந்து எங்கு சென்றுகொண்டிருந்தோம் என்றால் மதகொண்டப்பள்ளியில் இருந்து தளி நோக்கி சென்றுகொண்டிருந்தோம். நாங்கள் சென்றபோது Echare வாகனம் Reverse எடுக்கும் போது வேகமாக வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதிவிட்டது. Echare வாகனம் கம்பெனி கேட் முன்பு ரோடு ஓரமாக நிறுத்தியிருந்து Signel போட்டு Reverse எடுக்கும்போது நாங்கள் தான் வேகமாக வந்து Echare வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலீசிடம் யார் புகார் கொடுத்தது என்றால் நான் சென்ற வாகன ஓட்டுநர் அசோக் புகார் கொடுத்தார். அசோக் அஜாக்கிரதையாக ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்தி அதை

மறைப்பதற்காக அவர் புகார் கொடுத்திருக்கிறார் என்றால் இல்லை. எனது வாகனத்திற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. Echare வாகனத்திற்கு சேதம் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்ருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்தின் போது நான் எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் முதலில் ஓசூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் . நான் ஓசூர் அரசு மருத்துவமனைக்கு சிசிக்சைக்கு சென்றேன் என்பதற்கு AR Copy தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு பின்பு ஓசூர் காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். விபத்தின் போது எங்கு அடிப்பட்டது என்றால் வலது கால் முட்டியில் அறுவைசிகிச்சை செய்து ஸ்குரு பொறுத்தப்பட்டுள்ளது. தலையின் வலதுபுறம் எலும்புமுறிவு ஏற்பட்டது. 07.03.2025 முதல் 30.03.2025 வரை காவேரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துகொண்டேன். தலையில் எலும்பு முறிவு ஏற்பட்ட காரணத்தினால் அறுவைசிகிச்சைசெய்யப்பட்டுள்ளது. 15 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்ட பிறகு 21.05.2025 முதல் 24.05.2025 வரை காவேரி மருத்துவனைக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்காக மறு சிகிச்சைக்கு சென்றேன். தற்போது என்ன நடக்கிறது என்பது எனக்கு நன்றாக தெரிகிறது என்றால் சரிதான். சில சமயம் ஞபாகம் சரியாக வருவதில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எல்லாம் சரியாகிவிட்டது என்றும் எனக்கு தலையில் ஏற்பட்ட காயம் சரியாகவில்லை என்றால் அதற்கு நிமான்ஸ் மருத்துவமனையில் சான்று வழங்கியிருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்தேன் என்றால் BFW என்ற தனியார் கம்பெனியில் System Operator ஆக பணிபுரிந்து வந்தேன். மனுவில் அந்த நிறுவனத்தில் வேலை செய்தும், பால் வியாபாரம் செய்து வந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.த.சா.ஆ14 ஆனது 2024 அக்டோபர் மாதத்திற்குரிய சம்பள சான்றிதழ் என்றால்

சரிதான். விபத்து தேதி வரை நான் அங்கு வேலை செய்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். விபத்திற்கு முன்பே நான் அந்த கம்பெனியில் இருந்து நின்றுவிட்டேன் என்றும் அதனால் எனக்கு வருமானம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வருமானம் வருகிறது என்பதற்கு எனது வங்கி கணக்கு புத்தகம், Incomtax ஆவணம், சம்பள பட்டியல் ஆகியவற்றை தாக்கல் செய்து நிருப்பித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் எல்லாம் அந்த மருத்துவமனை நிர்வாகத்தை அழைத்து நிருப்பிக்க வேண்டும் என்றும் உள்நோயாளியாக இருக்கும் சமயத்தில் வழங்கப்படும் பார்மசி பில்கள் மெயின் பில்லிலேயே சேர்க்கப்படும் என்றால் சரியல்ல. ஊனசான்றிதழ் வாங்குவதற்கு நான் கிருஷ்ணகிரிக்கு சென்றிருந்தேன். எனக்கு வழக்கியுள்ள ஊனசான்றிதழ் சதவீதம் அதிகம் என்று சொன்னால் சரியல்ல. இறுதி உத்தரவு பிறப்பிக்கும் போது எனது கணவக்குறைவை கருத்தில் கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**வழக்கறிஞர் திரு.R.சிவபிரகாஷ்., B.Com., L.L.B., M.S.No.1976/2021 அவர்கள் மொழிபெயர்த்து சொன்னதில் இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆட்சேபனை இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள்.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.